**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை - 2018**

-----------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை

மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு

உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2 இற்கு முரணாக ரூபா 418,118 தொகையான நிலையான சொத்துக்களுக்கான பொறுமானத்தேய்வு மற்றும் ரூபா 704,083 தொகையான ஐயக்கடனுக்கான மிகையேற்பாடு என்பன வட்டிப் பெறுவனவுகளாக முதலீட்டு நடவடிக்கைளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1.99 மில்லியன் தொகையான முன்னைய ஆண்டு சீராக்கல் பெறுமதி மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சலுக்கு வட்டி வருமானப் பெறுமதியை சீராக்கம் செய்யும் போது இப் பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய முன்னைய ஆண்டு சீராக்கல் பெறுமதி மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடாந்த அறிக்கைத் திகதியிலும் சொத்து ஒன்றின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் உரிய மாற்றங்கள் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் பெறுமானத்தேய்வுக் காலப்பகுதி | மதிப்பீட்டிற்காக பிரதம விலைமதிப்பீட்டாளருக்கு இச்சொத்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வு செய்யப்பட வேண்டும். எனினும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்பாட்டிலுள்ள ரூபா 31.42 மில்லியன் பெறுமதியான அதிகாரசபையின் சொத்து தொடர்பாக நியமத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 2.4 மில்லியன் கூட்டுமொத்தமான நிலையான வைப்புக்கள் மீதான வட்டிகள் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அத்தகைய சீராக்கங்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் | நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19.93 மில்லியன் தொகையான கடன்பட்டோர் மீதி 5 ஆண்டு காலத்திற்கு மேலாக முன்கொண்டுவரப்பட்டிருந்த 10 கடன்பட்டோர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 4.02 தொகையான மீதியை உள்ளடக்கியிருந்தது. மேலும் மேற்குறிப்பிடப்பட்ட கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெறவேண்டிய ரூபா 807,187 தொகை அக் கம்பனியிடமிருந்து | புத்தகங்களிலிருந்து 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 4.02 மில்லியன் பிணக்குத்தீர்த்தல் கட்டணங்களை பதிவழிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன் கம்பஹா மற்றும் ஜல்தர இலிருந்து பணத்தை அறவீடு செய்யாததன் காரணமாக பணத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. மேலும் ஏனைய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களை கொள்வனவு செய்ததற்காக 1999 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகையாகும். அப் பொருட்களைப் பெறுவதற்கு முன்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் மற்றும் 19 ஆண்டு காலத்திற்கு மேலாக அப்பணம் அறவீடு செய்யப்படாமை என்பன உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனமாகவுள்ள போதிலும் அதிகாரசபை இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் நாளதுவரை வழங்கப்பட்டிருக்காத தராதர ஒத்தியல்புச் சான்றிதழ்களிற்காக (certificates of conformity) கூட்டு ஆதனத்திற்கு பெற வேண்டிய ரூபா 3.71 மில்லியன் தொகை 4 ஆண்டுகளுக்கு முன்பிருந்து கடன்பட்டோராக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அதிகாரசபையின் நோக்கெல்லையினுள் உள்ளடக்கப்பட்டிருக்காத கம்பஹா மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலைகளில் உள்ள பம்பி இல்லங்களின் (Pump houses) பராமரிப்பிற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியவைகள் ரூபா 11.24 மில்லியன் கூட்டுமொத்தமானதுடன் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 2.62 மில்லியன் தொகையாகும். | 2016 ஆம் ஆண்டில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் தற்போது முறையான உடன்படிக்கை ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு இச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றதுடன் 2016 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு நிலுவையும் காணப்படவில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 5 ஆம் பந்தியின் (ஏ) பிரிவு | கூட்டு ஆதனங்களின் பொது வசதிகளின் பராமரிப்பினை உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு கையளிப்பது அதிகாரசபையின் நோக்கங்களில் ஒன்றாக காணப்பட்ட போதிலும் மாளிகாவத்தை மற்றும் ஜல்தரவிலுள்ள வீட்டுத்திட்டங்களின் பொது வசதிகள் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது வசதிகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு இவ் உள்ளூராட்சி அதிகாரசபைகள் தயக்கங்காட்டுவதால் இக் கையளிப்பு தாமதமாகியிருந்தது. | குறிப்பிடப்பட்ட அதிகாரச்சடத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | எதாவது குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பதிவிநிலை உத்தியோகத்தருக்கு மாத்திரம் ஆகக்கூடியது ரூபா 100,000 வரையான கட்டுநிதிகள் வழங்கப்படக்கூடியதாக இருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 840,000 கூட்டுமொத்தமான முற்பணங்கள் 04 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | பதவிநிலை தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்களை வழங்குதல் தற்போது தொடரப்படுவதில்லை. நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனாக நாடாத்தும் தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு அவ்வாறு முற்பணங்கள் வழங்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் மாத்திரம் அவதானிக்கப்பட்டன. அம் முற்பணங்கள் அனைத்தும் தற்போது சரியாக தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. | குறிப்பிடப்பட்ட அதிகாரச்சடத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 371(5)(இ) | 18 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 927,375 கூட்டுமொத்தமான கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக 20 நாட்கள் தொடக்கம் 40 நாட்கள் வரையான காலவீச்சொன்று எடுக்கப்பட்டிருந்தது. | அவற்றை முழுமையாக தீர்ப்பனவு செய்வதற்கு 2019 மார்ச் மாதத்திலிருந்து நடவடிவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்ட நிதிப்பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையின் பின்னர் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான கணக்காய்வு அறிக்கைகள் உள்ளடங்கிய வருடாந்த அறிக்கைகள் அதிகாரசபையால் 2019 யூன் 30 வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது டன் 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தமிழ் மொழிபெயர்ப்பு பூர்த்தியடைந்த பின்னர் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | ரூபா 250,000 வரையான இடர் கடன் மீதியின் ஆகக்கூடிய எல்லையை கருத்தில் கொள்ளாமல் அதிகாரசபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடனில் ரூபா 199,250 மீதி காணப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 250,000 தொகையான இடர்கடன் | அவ் இடர் கடனில் பின்னர் செலுத்தப்பட்ட தொகை சாதாரண நடைமுறையின் பிரகாரம் அறவிடப்பட்டுள்ளதுடன் 60 மாதங்களினுள் அறவிடுவதற்குப் பதிலாக 24 மாதங்களில் முன்னைய கடனை அறவீடு செய்வதற்கு | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | |
|---|---|
| மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் உத்தியோகத்தரின் இடர் கடன் மீதி ரூபா 449,250 ஆகக் காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 140,19 மில்லியன் மிகையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 98.38 மில்லியனாக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 41.81 மில்லியன் தொகையான முன்னேற்றம் ஒன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. செயற்பாட்டு வருமானம் மற்றும் செயற்பாடற்ற வருமானம் என்பன முறையே ரூபா 78.45 மில்லியன் மற்றும் ரூபா 11.29 மில்லியன் தொகையால் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொர்பான பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டு ஆதனங்களிற்கான சான்றிதழ்களை வழங்குவதிலிருந்தான வருமானம் மற்றும் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 79.47 மில்லியன் மற்றும் ரூபா 9.88 மில்லியன் தொகைகளால் அதிகரித்திருந்ததுடன் பராமரிப்புச் செலவினம் ரூபா 7.14 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தது. அத்துடன் அலுவலக வாடகைச் செலவினம் ரூபா 9.42 மில்லியன் தொகையால் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 339.37 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய சொத்துக்கள் ரூபா 201.17 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 138.20 மில்லியன் அல்லது 69 சதவீதத்தால் தேறிய சொத்துக்கள் அதிகரித்திருந்ததை சுட்டிக்காட்டுகின்றது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 4:1 ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அவ் விகிதம் 3:1 ஆகக் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் விரைவு சொத்துக்கள் விகிதம் 4:1 ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் இது 3:1 ஆகக் காணப்பட்டது.

ரூபா 259 மில்லியன் தொகை மூன்று வருட நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததால் நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவு சொத்துக்கள் விகிதம் என்பன உயர் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அம் முதலீடு அதிகாரசபைக்கு நன்மையளிக்கக்கூடியவாறு முகாமை செய்யப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அலுவலகம் தொழிற்படுகின்ற வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்தை ரூபா 4.71 மில்லியன் தொகை செலவிட்டு அதிகாரசபை புனரமைப்புச் செய்திருந்தது. புனரமைப்பிற்காக ஏற்பட்ட செலவினத்தை தீர்ப்பனவு செய்வதற்காக கட்டிடத்தின் உரிமையாளருடன் எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | இக் கட்டிடத்தில் அதிகாரசபை தொழிற்படுகின்றதுடன் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் அதிகாரசபையினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. | வாடகை உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் போது கட்டிட பராமரிப்பு தொடர்பான பொறுப்புக்களை குறிப்பாக ஒதுக்கீடு செய்யும் வகையில் உடன்படிக்கைகளில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) அதிகாரசபையால் 2018 ஆம் ஆண்டின் போது வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வீட்டு வாடகையாக ரூபா 6.14 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வீட்டு வாடகை உடன்படிக்கைகள் எதுவும் | தேவையான திருத்தங்கள் வாடகை உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்டு கட்டிடத்தின் உரிமையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கைகளை முறையாக கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரிவுத் தலைவரின் அங்கீகாரமின்றி காசிதாதி வேண்டுதல் படிவங்கள் மற்றும் பொருள் வழங்கல் குறிப்புக்களில் களஞ்சியத்திலிருந்து பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரோணர்கள் மற்றும் கார்ட்றிச்களை (toners and cartridges) பயன்படுத்திப் பெறக்கூடிய பிரதிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாமல் ஒரே வகையான ரோணர்கள் மற்றும் கார்ட்றிச்கள் ஒரே உத்தியோகத்தர்களுக்கு காலத்திற்கு காலம் வழங்கப்பட்டிருந்தன. | அத்தகைய நிலைமையை தவிர்ப்பதற்காக அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரோணர் மற்றும் கார்ட்றிச்களைப் பயன்படுத்துவது தொடர்பாக தற்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | களஞ்சியங்களில் இருந்து முறையாக பொருட்கள் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கம், தனியார் மற்றும் சுனாமி கூட்டு ஆதனங்கள் தொடர்பான முகாமைத்துவக் கூட்டிணைப்புக்கள் மற்றும் குழுக்களைப் பதிவுசெய்தல் மற்றும் புதுப்பித்தல் மற்றும் செயற்பாடற்ற குழுக்களை செயற்படுத்துதல் தொர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 4.28 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் கூட்டு ஆதனங்களின் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கான உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 95 சதவீத கூட்டு ஆதனங்களின் முகாமைத்துவக் கூட்டிணைப்புக்கள் மற்றும் குழுக்கள் | 95 சதவீதத்திற்கு மேற்பட்ட சுனாமி கூட்டு ஆதனங்களுக்கான திட்டங்களைப் பதிவு செய்தல் உரித்துறுதிகளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் முகாமைத்துவக் கூட்டிணைப்புக்களை ஸ்தாபிக்க முடியாதிருந்தது. | தராதர ஒத்தியல்பு சான்றிதழ்கள் மற்றும் உரித்துறுதிகளை வழங்கும் செயன்முறை வினைத்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் முகாமைத்துவக் கூட்டிணைப்புக்களை ஸ்தாபிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்திற்கான திருத்தங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் கூட்டு ஆதனங்கள் தொடர்பான 73 விழிப்புணர்வு நிகழ்சசித்திட்டங்களை நடாத்துவதற்கும் கூட்டு ஆதனங்கள் தொடர்பாக விழிப்புணர்விற்கான கூற்றுக்களின் 10,000 பிரதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 16 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் கூற்றுக்கள் எதுவும் அச்சிடப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டில் பல தடவைகள் தயாரிக்கப்பட்ட வரைபுத் திருத்தங்கள் அனைத்தும் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அந் நடவடிக்கைகள் தற்போது செயன்முறையில் காணப்படுகின்றன. | அதிகாரச்சட்டத்திற்கான திருத்தங்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | விபரமான பெறுகைத் திட்டம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் சேர்த்து தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட பெறுகைத் திடடத்தின் பிரகாரம் அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் 4 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 110.8 | காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 75 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அரச காணியொன்றைப் பெற்றுக்கொள்ளும் | பெறுகைச் செயன்முறையை முறையாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அப் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நோக்கத்துடன் அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 139 மற்றும் 118 ஆகக் காணப்பட்டன. 06 உத்தியோகத்தர்கள் 2018 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் நுகர்வோர் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும் போது ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு முரணாக புதினப்பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிக்காமல் அவ் இரண்டு விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் நேர்முகப்பரீட்சைகளை நடாத்தி நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | மொத்த வெற்றிடங்கள் தற்போது 13 வரை குறைவடைந்துள்ளது. அவ் வெற்றிடங்களுக்காக எதிர்காலத்தில் முறையான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பதவியணியினருக்கான ஆட்சேர்ப்புக்கள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திருத்தப்பட்ட பாதீட்டிற்கும் உள்ளபடியான தொகைகளுக்கும் இடையே 30 சதவீதம் தொடக்கம் 1,187 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்ததால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாடுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காதமையை சுட்டிக்காட்டுகின்றது. | 2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு சாத்தியமான சந்தர்ப்பத்திலும் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியயொன்றாக பாதீடு பயன்படுத்தப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டுக்கான ''நிகழ்ச்சிநிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டுக்கான நிலைபேறான அபிவிருததி இலக்குகளினை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தந்திரோபாயங்கள், இலக்குகள் மற்றும் சுட்டிகளைத் தயாரிப்பதற்கான நடைமுறையொன்று அதிகாரசபையில் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையக்கூடியவாறு 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலைபேறான அபிவிருத்தி தந்திரோபாயங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான தயார்ப்படுத்தலின் போது ஏனைய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்படாததன் காரணமாக இலக்குகளை அடைந்துகொள்வதற்கான திட்டங்களைத் தயாரிக்கும் செயன்முறை மற்றும் தயார்ப்படுத்தல் என்பன பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக ஏனைய நிறுவனங்களுடன் முறையான ஒருங்கிணைப்பு பேணப்படுதல் வேண்டும். |